**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண் : 100/2020**

**அ .சா : 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. புனிதா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | பிரகாசம் |
| ஊர் | : | நாகரசம்பட்டி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | சலவை தொழில் |
| மதம் | : | |
| வயது | : | 35 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 10.07.2023**

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது நாகரசம்பட்டியில் வசித்து Iron வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். அ.சா.2 எனது தங்கை. எனது கணவருக்கு நானும், அ.சா.2 ம் மனைவிகள். எனக்கு குழந்தை இல்லாததால் எனது தங்கை அ.சா.2 ஐ எனது கணவருக்கு திருமணம் செய்து வைத்தேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவில் நானும், அ.சா.1 மற்றும் 2 ம் எனது வீட்டில் மாடியில் உள்ள சீட்டு போட்ட அறையில் தூங்கினோம். காலையில் எழுந்து கீழே வந்து பார்த்த போது வீட்டின் கதவு திறந்து கிடந்தது. உள்ளே சென்று பார்த்த போது பீரோவில் வைத்திருந்த நகைகள் காணாமல் போயிருந்தது. மேற்படி நகைகள் என்னென்ன என்ற விவரம் எனக்கு தற்போது நினைவில் இல்லை. நகைகள் காணாமல் போனது குறித்து எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எந்த தேதியில் திருடு போனது என்ற விவரம் தெரியாது. என்ன நகை, எவ்வளவு நகை திருடு போனது என்றும் எனக்கு தெரியாது. போலீசார் திருப்பி கொடுத்த நகை புது நகை என்றால் சரிதான். திருடு போன நகையும், எங்களுக்கு கொடுத்த நகையும்

வெவ்வேறானவை என்றால் சரிதான். நகையை யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி.எண் : 100/2020**

**அ .சா : 6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. குப்புசாமி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ரங்கன் |
| ஊர் | : | எலுமிச்சனஅள்ளி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | டிரைவர் |
| மதம் | : | |
| வயது | : | 49 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 10.07.2023**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது எலுமிச்சனஅள்ளியில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சகலை. அ.சா.2 மற்றும் அ.சா.4 எனது மனைவியின் அக்கா. கடந்த 2016 ஆம் வருடம் ஒரு நாள் அ.சா.1 ன் வீட்டில் தங்க நகைகள் திருடு போனதாக தகவல் தெரிந்து அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து பார்த்தேன். அப்போது என்னுடன் என் மாமா செல்வம் என்பவரும் உடன் இருந்தார். அப்போது போலீசார் அங்கு வந்து நகை காணாமல் போனது குறித்து விசாரித்து மேப் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பத்தை வாங்கினார்கள். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் என் மாமா செல்வம் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சகலை புகார் கொடுப்பதற்கு காவல் நிலையத்திற்கு என்னை கூப்பிடவில்லை. நான் கையெழுத்து போட்ட பேப்பரை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். நகை திருடு போய்விட்டதாகவும், சம்பவ இடத்தில் உள்ள வீடுகள்

குறித்தும் விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு அ.சா.1 எனது உறவினர் என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V
SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.